<u>சுருக்கம்</u>

சமூகநலம் – ஊனமுற்றோர் நலம் –தமிழக அரசின் பல்வேறு துறைகளில் இரண்டாண்டுக்கு மேல் தொகுப்பூதியத்தின் கீழ் பணியாற்றி வரும் ஊனமுற்றோருக்கு காலமுறை ஊதியம் வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் (ம) சத்துணவுத் திட்ட (சந4)த் துறை

அரசாணை (நிலை) எண்.151 நாள்: 16.10.2008

திருவள்ளுவர் ஆண்டு 2039
புரட்டாசி திங்கள் 30ம் நாள்

படிக்க:

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 19–8–2008 அன்று ஊனமுற்றோருக்கு அளிக்கப்பட்ட புதிய சலுகைகள் பற்றிய செய்தி குறிப்பு.
2. முதன்மைச் செயலாளர் / ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரின் கடித எண்.8235/ஆர்.டி3.1/2008, நாள் 21.08.08

---

<u>ஆணை:</u>

தமிழ்நாடு உடல் ஊனமுற்றோர் சங்கங்களின் கூட்டமைப்பின் நிர்வாகிகள் முதலமைச்சர் அவர்களை தலைமைச் செயலகத்தில் 19–8–2008 அன்று சந்தித்து, தங்களது கோரிக்கைகளை அளித்தார்கள். அப்போது ஊனமுற்றோர் சங்கங்களின் கூட்டமைப்பின் கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்து பெரும்பாலான கோரிக்கைகளை ஏற்று உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அரசாணைகள் வெளியிடப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். தமிழக அரசின் பல்வேறு துறைகளில் இரண்டாண்டுக்கு மேல் தொகுப்பூதியத்தின்கீழ் பணியாற்றி வரும் ஊனமுற்றோருக்கு காலமுறை ஊதியம் வழங்கப்படும் என்ற அறிவிப்பும் அதில் ஒன்றாகும். தமிழக அரசின் பல்வேறு துறைகளில் இரண்டாண்டுகளுக்கு மேல் தொகுப்பூதியத்தின் கீழ் பணியாற்றி வரும் ஊனமுற்றோருக்கு காலமுறை ஊதியம் வழங்கப்படும் என்ற மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பின் மீது உரிய ஆணைகள் வெளியிடுமாறு முதன்மைச் செயலாளர்/ ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் அரசை கோரியுள்ளார்.

2. முதன்மைச் செயலாளர் / ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமாகப் பரிசீலித்த பின்னர் தமிழக அரசின் பல்வேறு துறைகளில் இரண்டாண்டுகளுக்கு மேல் தொகுப்பூதியத்தின்கீழ் பணியாற்றி வரும் ஊனமுற்றோருக்கு காலமுறை ஊதியம் வழங்க அரசு ஆணையிடுகிறது.

**3.** அனைத்துத்துறைத் தலைவர்களும் இவ்வாணையை தவறாது பின்பற்றுமாறும் இவ்வாணையின்படி தொகுப்பூதியத்திலிருந்து காலமுறை ஊதியத்திற்கு கொண்டு வரப்படும் ஊனமுற்றோர் சார்பாக ஏதேனும் விதிகள் தளர்வு செய்யப்பட வேண்டுமாயின் அந்தந்த துறைத் தலைவர்கள் அந்தந்த தலைமைச் செயலக நிர்வாக துறைகளின் ஒப்புதல் பெற்று, பின்னர் அவர்களின் பணியை வரன்முறைப்படுத்திக் (Regularize) கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**4.** இவ்வாணை பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை / நிதித் துறையின் ஒத்திசைவுடன் முறையே அ.சா.கு எண். 49404/செ/ பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள் **18.9.2008**, **3012**/FS/P/2008, நாள் 22.9.2008ன்படி வெளியிடப்படுகிறது

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நா.ச. பழனியப்பன்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்

முதன்மைச் செயலர் மற்றும் ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர், சென்னை– **6.**
மாநிலக் கணக்காயர், சென்னை **9/18/35**
மாநிலக் கணக்காயர், சென்னை **18/35** (பெயரில்)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை– **35**
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் **(ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் வழியாக)**
அனைத்து மாவட்ட ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு அலுவலர்கள்
(ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் மூலமாக)
அனைத்துத் துறைத் தலைவர்கள்
<u>நகல்</u>
அமைச்சர் (சமூக நலம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– **9**
முதலமைச்சர் அலுவலகம், சென்னை– **9**
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை , சென்னை–**9**
நிதித்துறை சென்னை –**9**
தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகள், சென்னை– **9.**
செயலாளர் , தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்,
சென்னை –**2**
இருப்புக் கோப்பு / உபரிப்படிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்